செ.வெ.எண்: 27 நாள்: 10.11.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் மற்றும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களையும், அவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளையும் மற்றும் அடிப்படை வசதிகளையும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு கடல்சார் வாரியம் துணைத் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் முனைவர்.க.பாஸ்கரன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், பணங்குடி, பாப்பா கோவில் அரசு உயர்நிலைப் பள்ளி, கருவேலங்கடை சமுதாய கூடம் ஆகிய முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களையும், அவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளையும் பார்வையிட்டு, மேலும், நாகப்பட்டினம் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அம்மா உணவகத்தில் உணவு தயாரிப்பதையும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு கடல்சார் வாரியம் துணைத் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் முனைவர்.க.பாஸ்கரன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் திரு.என்.கௌதமன் ஆகியோர் உடன் உள்ளனர்.

இந்த ஆய்வில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு கடல்சார் வாரியம் துணைத் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழை மற்றும் வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலையின் காரணமாக நாகப்பட்டினம் மாவட்டத்தில் தாழ்வான பகுதிகளில் வசிக்கின்ற மக்களை பாதுகாப்பாக பள்ளிகள், சமுதாய கூடங்கள், திருமண மண்டபங்கள் போன்ற இடங்களில் தங்க வைப்பதற்கும், மேலும், அந்த இடங்களில் உணவு, குடிநீர், மின்சாரம், கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகளை தயார் நிலையில் வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தை பொறுத்தவரையில் இன்றைய காலை நிலவரப்படி 27 செ.மீ அளவு மழை பதிவாகி உள்ளது. நாகப்பட்டினம் மற்றும் கீழ்வேளுர் தாலுகாவில் அதிகபட்சமாக 31 செ.மீ அளவு மழை பதிவாகி உள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் உடனுக்குடன்

வெளியேற்றப்படுகிறது. நேற்று மதியம் முதல் 11 முகாம்களில் இருந்து உணவு சமைத்து மக்களுக்கு உணவு வழங்கி கொண்டிருக்கிறோம். நேற்று இரவு, இன்று காலை 250 நபருக்கு மேல் உணவுகள் வழங்கப்பட்டு முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். மதியம் 3,034 நபர்களுக்கு உணவு தயார் செய்யப்பட்டுள்ளது. தற்போது நம் மாவட்டத்தில் மழையளவு குறைந்துள்ளது. அனைத்து நியாய விலைக்கடைகளிலும் தேவையான அரிசி, போன்ற அத்தியாவசிய பொருட்கள் தயார்நிலையில் இருக்குமாறும், கிடைப்பதற்கும் அனைத்து கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயலர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்றைய தினத்தில் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் மழைநீரில் மூழ்கி இருப்பதாக முதல்கட்ட தகவல்கள் கிடைத்துள்ளது. ஓரிரு நாட்களில் மழை நீர் வடிந்த பின்பு கணக்கெடுப்பு செய்யப்படும். பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டத்தின் படி நமது மாவட்டத்தில் 56,000 ஹெக்டேர் பரப்பு சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 42,000 பேர் இதுவரை (PMFBY) பிரதம மந்திரி காப்பீட்டு திட்ட பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளார்கள். அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் காப்பீட்டு தொகைக்கு பதிவு செய்ய கடைசி தேதி (15.11.2021) என்பதால் அனைத்து விவசாயிகளும் பயிர் காப்பீடு செய்யுமாறு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு கடல்சார் வாரியம் துணைத் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் முனைவர்.க.பாஸ்கரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.முகமது ஷா நவாஸ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.பி.நாகை மாலி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெ.பெரியசாமி, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**